
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1040**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# இது பெரியார் மண்

ர.பிரகாசு

**38**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

* அண்ணாவுக்கு பின் நிற்பவர் 'தோலி' சுப்பிரமணியன்



## 'தோலி' தந்த மகத்தான தோழன்!

'தோலி' சுப்பிரமணியத்தின் இளம் வயதிலேயே அவர் அம்மா இறந்துவிட்டார். அவருக்கு திருமணம் செய்துவைத்துவிட குடும்பத்தினர் எண்ணியபோது, 'தி.க.காரனுக்கு பெண் கொடுக்க முடியாது' என உறவினர்கள் மறுத்துவிட்டனர். ஆனால், திராவிடர் கழகக் குடும்பத்தில் இருந்தே சுப்பிரமணியனுக்கு பெண் கொடுக்க வந்தார் தென்பாதி பெரியசாமி. அப்போது பெரியாருடன் இருந்து அவருக்கான பணிவிடைகளை செய்துவந்தவர் பெரியசாமி. தன் அக்காவை சுப்பிரமணியனுக்கு மணம் முடித்து வைத்தார்.

அன்றைக்கு டெல்டா மாவட்டம், முழுக்க நிலவிய பண்ணை அடிமைத்தனத்தை ஒழித்துக்கட்ட மிகப் பெரிய கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆனால், தோலி சுப்பிரமணியன் பண்ணையில் ஆதிக்கமும் இருந்ததில்லை, அடிமைத்தனமும் இருந்ததில்லை. அப்பகுதி மக்களின் கல்வி வளர்ச்சியிலும் தனிக்கவனம் செலுத்தினார். அங்கு தொடக்கப் பள்ளி இருந்த நிலையில், ஊராரின் உதவியுடன் அதை நடுநிலைப்பள்ளியாக மாற்றினார். சிறிய ஊர் என்பதால் மாணவர் சேர்க்கையும் குறைவாகவே இருந்தது. அதை சரிக்கட்டும் விதமாக, வெளியூர் மாணவர்களும் தங்கிப் படிக்கும் வண்ணம் உண்டு உறைவிடப் பள்ளியாக மாற்றினார். அதற்கான பொருள் செலவிலும் தானே பெரும்பங்கு ஏற்றுக்கொண்டார்.



"1966-இல் தோலி பள்ளிக்கு ஆசிரியராகச் சென்றவர் என் தந்தை தட்சிணாமூர்த்தி. அப்போது, பின்னத்தூரில் எங்களுக்குச் சொந்தமான இடத்தை அப்பாவிடம் கேட்டுப்பெற்று பெரியாருக்கு சிலை ஒன்றை எழுப்பினார் சுப்பிரமணியன். உறுதியான பெரியாரிஸ்ட்டாக, எளிமை யான வாழ்க்கை வாழ்ந்தவர். இயக்கத் திற்காக சொந்த சொத்தை இழந்தவர்."

**– லெனின், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**

அந்தக் காலகட்டத்தில்தான் மாபெரும் சாதி ஒழிப்புப் புரட்சிக்குத் தயாரானார் தந்தை பெரியார். 'பிராமணாள்' பெயர் அழிப்புக் கிளர்ச்சியில் 700-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுவிட்ட பின்பும், அரசிடம் இருந்து ஆக்கபூர்வமான முன்னெடுப்பு இல்லாததும், இமானுவேல் சேகரனார் படுகொலையும் அதையொட்டி நடைபெற்ற கலவரங்களும் பெரியாரை பெரிதும் காயப்படுத்தியிருந்தன.

அரசியல் சட்டத்திலேயே சாதியை பாதுகாக்கும் பிரிவுகள் இருக்கும்போது எப்படி சமத்துவத்தை ஏற்படுத்த முடியும் எனக் கொந்தளித்த பெரியார், 1957–ஆம் ஆண்டு தஞ்சையில் நடைபெற்ற ஸ்பெஷல் மாநாட்டில், அப்பிரிவுகளை நீக்காவிட்டால், கொளுத்தப்போவதாக அறிவித்தார். அரசாங்கமோ அப்பிரிவுகளை நீக்குவதற்குப் பதிலாக, சட்டத்தைக் கொளுத்தினால் என்ன தண்டனை எனப் புதிதாக சட்டம் இயற்றியது. 10,000-க்கும் மேற்பட்டோர் சட்டத்தைக் கொளுத்தி, 3000-க்கும் மேற்பட்டோர் சிறைபுகுந்தனர்.

அப்படி கைதாகி சிறைக்கொடுமைகளை அனுபவித்தவர்களில் தோலி சுப்பிரமணியனும் ஒருவர். அரசியல் சட்டப் பிரிவுகளை, தோலியில் கொளுத்தி, ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டால் அது காவல்துறையின் கவனத்தை ஈர்க்காது என்பதற்காக, உதய மார்த்தாண்டம் பகுதியில் இயக்கத் தினரை திரட்டி வந்து கொளுத்தினார். அதற்காக 10 மாதங்கள் கடுங்காவல் தண்டனை பெற்று புதுக்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது, அன்னை மணியம்மையார் ஆசிரியர் கி.வீரமணியுடன் ஒவ்வொரு சிறைச்சாலையாகச் சென்று, சிறைகளில் இருந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறிவந்தார். அப்படி புதுக்கோட்டை சிறைக்கும் மணியம்மையார் சென்று, சுப்பிரமணியனை சந்தித்தார்.

சுப்பிரமணியன் கையை கீழே இறக்காமல், வணக்கம் வைத்தவாறே நீண்ட நேரமாக பேசிக்கொண்டிருந்தார். சந்தேகமடைந்த மணியம்மையார், கையை நீட்டச்சொல்லி பார்த்தபோது, சுப்பிரமணியனுக்கு சிறையில் நெல் குத்தி, குத்தி கைகளெல்லாம் கொப்பளித்திருந்தது. ஒரு மிகப் பெரிய நிலச்சுவான்தார், ஆனால் தான் ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக, இலட்சியத்துக்காக எந்தக் கொடுமையையும் தாங்கத் தயாராக இருந்தது மட்டுமல்ல, 'தான் துன்பப்படுகிறேன்' என்பதுகூட தன் தலைவருக்குத் தெரிந்துவிடக் கூடாது என்று எண்ணினார்.

**...பயணிப்போம்.**

## தலைமைத்துவப் பயிற்சி பெறும் மகளிர் அணி அமைப்பாளர்!

ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு (UN Women) நடத்தும் மிகவும் மதிப்புமிக்க 'She Leads 3' – இந்தியப் பெண்களுக்கான தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்தில் கலந்துகொண்டுள்ளார் புதுச்சேரி மாநில, கழக மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி ஸ்ரீகாந்த்.

டிசம்பர் 4 மற்றும் 5–ஆம் தேதிகளில் புதுடெல்லியில் நடைபெற்று வரும், இந்த நிகழ்ச்சிக்கு, நாடு முழுவதிலும் இருந்து பல்வேறு அரசியல் கட்சிகளில் இருந்து தேர்வு செய்யப்பட்ட 30 பெண்களில் ஒருவராக காயத்ரி கலந்து கொண்டுள்ளார்.

'இறைவி' என்கிற பெண்கள் அமைப்பைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கும் இவர், பெண்கள் – குழந்தைகள் உரிமைகள், பாலினச் சமத்துவம், மகளிர் பொருளாதார மேம்பாடு எனத் தொடர்ச்சியாக இயங்கி வருகிறார். மழை, வெள்ளம், புயல், கொரோனாவின்போது தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து, பேரிடர் மீட்புப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். முன்னர் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட மேலாளராகவும், மக்கள் தொடர்புப் பணியாளராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

இந்தப் பயிற்சித் திட்டத்தில் கலந்துகொள்வது குறித்து, அவர் கருத்து தெரிவிக்கையில், "பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பெண்ணியக் கொள்கைகளால் சிறு வயதிலிருந்தே ஈர்க்கப்பட்டதால், பெண்களுக்கான எனது உழைப்பு சலிப்பின்றி நீண்டுகொண்டே இருக்கிறது. பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் பெண்களின் முன்னேற்றத்துக்கான திட்டங்களை எப்போதும் நன்றியுடன் நினைவில் கொள்கிறேன்" என்கிறார்.

'கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெண்களுக்கான திராவிட மாடல் ஆட்சி இந்தியாவுக்கே முன்மாதிரியாகத் திகழ்கிறது. தி.மு.கழகத் துணைப் பொதுச்செயலாளர் மாண்புமிகு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் கண்ணியமான பெண்ணிய வழியிலும், தி.மு.கழக புதுச்சேரி மாநில அமைப்பாளர், புதுவை எதிர்க்கட்சித் தலைவர் சிவா அவர்களது வழிகாட்டுதலிலும், புதுச்சேரியில் பெண்களுக்கான அரசியல் வெளியை, நமது திராவிடக் கொள்கைகள் மூலம் தொடர்ந்து பரப்புவேன். புதுச்சேரியிலும் கழக ஆட்சி அமைந்திட அயராது உழைப்பேன்' என தனது சமூக வலைதளப் பக்கத்தில் காயத்ரி ஸ்ரீகாந்த் பதிவிட்டுள்ளார்.

# ஃப்ளாஷ்பேக்



## தலைவரிடமிருந்து வாங்கிய தொல்காப்பியப் பூங்கா!



லீலாவதி விஜய்

2003-ஆம் ஆண்டுவாக்கில், தன்மானத் தலைவர் கலைஞர் அவர்கள் 'தொல்காப்பியப் பூங்கா' நூல் வெளியிட்ட பின்னர், வேலூர் வருகை தந்திருந்தார். 'ரிவர் வியூ' ஓட்டலில் தங்கியிருந்த தலைவரை, அப்போது சிறுவனாக இருந்த என் கணவர் விஜய்யை, அவரின் பாட்டி சரோஜா வெங்கடேசன் அழைத்துச் சென்று, தொல்காப்பியப் பூங்கா நூலை தலைவரிடமிருந்து வாங்க வைத்தார். அன்றைய மாவட்டச் செயலாளர் அண்ணன் முகமது சகி, அண்ணன் அமைச்சர் காந்தி ஆகியோர் உடனிருந்தனர். பாட்டி சரோஜா அவர்கள் 40 ஆண்டு களாகக் கட்சியில் மாவட்ட மகளிர் தொண்டர் அணித் தலைவராகச் செயல்பட்டு, இன்று 70 வயதிலும் ஆர்வத்துடன் கழகப் பணி செய்து வருவது, கழகக் குடும்பமாகப் பெருமை அளிக்கிறது.

**– லீலாவதி விஜய், ஐ.டி.விங்க் ஒருங்கிணைப்பாளர், சலவன்பேட்டை பகுதி, வேலூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

**88**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



## மழை பாதிப்புகளும், மகத்தான பணிகளும்...

***மழைநீர் வடிகால் பணிக்காக 4,000 கோடி ரூபாய் செலவிட்டும், சென்னையில் தண்ணீர் தேங்குவதாக பா.ஜ.க.வினரும் அவர்களின் B, C, D டீம்களும் தி.மு.க. அரசை விமர்சிக்கிறார்களே?***

தமிழ்நாட்டுத் தலைநகரின் உள்கட்டமைப்பை மேம்படுத்த, 4,000 கோடி ரூபாயை ஒன்றிய பா.ஜ.க. அரசா அள்ளிக்கொடுத்தது? திராவிட மாடல் அரசு எடுத்த நடவடிக்கை அது. 2015–ஆம் ஆண்டு, ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியின் அலட்சியத்தால் பல உயிர்களைப் பலி கொண்ட செயற்கை வெள்ளம் போலவோ, ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் ஊழல் செய்த எடப்பாடி பழனிசாமி அரசினால் சென்னையின் பெரும்பாலான பகுதிகளில் மழை நீர் தேங்கியது போலவோ எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது என்பதால், 2021–இல் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், சென்னையில் மழைநீர் வடிகால்களை அமைக்கும் பணிக்காக 4,000 கோடி ரூபாயில் திட்டம் உருவாக்கப்பட்டது.

முழுத் தொகையையும் உடனே செலவிட



வில்லை. செலவிடவும் முடியாது. முதன்மைச் சாலைகள், உட்புறச் சாலைகள், சந்துகள் என ஒவ்வொரு கட்டமாக மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எந்தப் பகுதியில் பணி தொடங்கப்பட்டாலும், பெரு மழைக்காலத்துக்கு முன்பாக, அங்கே அந்தப் பணியை நிறைவு செய்துவிட்டு, மழைக்காலம் முடிந்த பிறகு, அடுத்த பகுதியில் பணிகளைத் தொடங்கி நிறைவு செய்வது என்ற முறையில், இந்தத் திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

காலநிலை மாற்றம், புயல் சின்னத்தின் தன்மை, மேகவெடிப்பு போன்றவற்றால் ஒரே நாளில் பல சென்ட்டி மீட்டர் மழைப்பொழிவு ஏற்படுகிறது. உலக அளவில் காலநிலை மாற்றம் பெரும் துயரங்களை அளித்து வருவதை, அன்றாடம் அறிகிறோம். அப்படிப்பட்ட நிலையில்தான், தமிழ்நாடு அரசு பல முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறது.

இந்த நிலையில், 2021-க்கு முன்பு மழை பெய்தால் ஏற்பட்டுவந்த பாதிப்புகள் இப்போது இல்லை என்பதுதான் சென்னையின் உண்மையான நிலவரம். அண்ணா சாலை, ஜி.எஸ்.டி. சாலை போன்ற முக்கியச் சாலைகளில் மழை நின்ற சில நிமிடங்களில் தண்ணீர் வடிந்துவிடுவது வழக்கமாக உள்ளது. மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான பணிகள் நடைபெறும் இடங்கள், தாழ்வான பகுதிகள், சுரங்கப்பாதைகள் ஆகியவற்றில் தண்ணீர் தேங்கி நின்று போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டால், பம்புசெட்டுகள் மூலம் மழைநீரை வெளியேற்றும் பணிகள் இரவு-பகலாக நடைபெறுகின்றன. முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர்கள், மேயர், துணை மேயர், மாநகராட்சிப் பணியாளர்கள், மின்சாரம் மற்றும் சுகாதாரத் துறையினர் என அனைவரும் களத்தில் நின்று பணியாற்றுகின்றனர்.

கடும் மழையிலும் மின்சார விநியோகம் தடைபடவில்லை. அதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாமல், மக்கள் தங்கள் பணியை மேற்கொள்ள முடிகிறது. மழை விட்ட சில மணித்துளிகளில் மக்கள் வெளியே செல்ல முடிகிறது. சுரங்கப்பாதைகளில் தேங்குகின்ற நீரும் உடனே அகற்றப்படுகிறது. சமூக வலைதளத்தில் பதிவிடப்படும் கோரிக்கைகளையும் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கிறது. 'டிட்வா' புயலால் இலங்கையைப் போல தமிழ்நாடும் பாதிக்கும், குறிப்பாக சென்னை சந்திக்கும் பாதிப்புகளை வைத்து, தி.மு.க. அரசை விமர்சிக்கலாம் என நினைத்த பா.ஜ.க.வினரும் அவர்களின் பழைய-புதிய அடிமைக் கூட்டத்தாரும், தங்களின் நினைப்பு நிறைவேறாமல் போனதால், புலம்புகின்ற கண்ணீர் தான் மழையைவிட அதிகமாக உள்ளது.

**...வினா தொடரும்.**

# நம் வரலாறு

## ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும்!

1963 ஜூன் 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை சென்னையில் கூடிய கழகப் பொதுக்குழு, 'இந்தி ஆட்சிமொழி மசோதா'வை எதிர்த்து நேரடிப் போராட்டத்தை அறிவித்தது. 'மாநில ஆட்சிமொழியாக இருப்பதும், திராவிட மொழிகளில் தலையாயதுமான தமிழையும், ஒன்றிய ஆட்சி மொழியாக ஏற்க வேண்டுமென்று வற்புறுத்துவதுடன், அதற்கேற்ப மாநில மொழிகளையும் ஏற்றுக்கொள்ளும்வரை ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சி மொழியாக இருந்து வர வேண்டும்' என்றும் பொதுக்குழு வலியுறுத்தியது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131